1. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜின்னாரோடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் பொது நிதியின் கீழ் புதியதாக 1 முதல் 4 வரையிலான கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் அதனை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட 4 கடைகளுக்கு பொறியியல் பிரிவில் 22.02.2019-ல் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட 1 முதல் 4 கடைகளுக்கு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்க மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடையின் விவரம் | கடையின் அளவு அடியில் | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை | நிர்ணயம் ஒரு கடையின் மாத வாடகை |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | |
| 1 | ஜின்னாரோடு, புதிய கடை 1 முதல் 4 கடைகள் | 8.82 அடி x 17.72 அடி =156.29 ச.அ | ரூ.2,50,000 | ரூ.6825/- |

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.297/2019/அ1

2. இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2015-ல் ஓய்வுபெற்ற திரு.ஆர்.விஜய குமார் என்பவர் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த காலத்தை 50% பணி காலமாக கருதி ஓய்வூதிய பயன்கள் வழங்க கேட்டு அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை துறை, உதவி இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை துறை மற்றும் ஆணையர், வாணியம்பாடி நகராட்சி ஆகியோர்கள் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.7986/2018 மற்றும் W.M.P.No.9948/2018 வழக்கு தொடர்ந்து உள்ளார். இவ்வழக்கிற்கு நீதிமன்றம் வழங்கப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து திரு.பி.எஸ்.சிவசண்முகசுந்தரம், அரசு சிறப்பு வழக்கறிஞரிடம் சட்டரீதியான கருத்துரு Legal Opinion கோரப்பட்டது. அதற்கான கருத்துரு கட்டணம் ரூ.5000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கருத்துரு கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3) இச்செலவினத்தை பொத நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1233/2018/சி1

3. திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் **15.02.2019**-ந் தேதியன்று பெறபட்டு 22.02.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதி அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Resource Recover Centre-1 (RRC) வளையாம்பட்டு உரக்கிடங்கில் கட்டுதல் பணி. | 18.00 | 1) எச். ஷபீர் அஹமத் | மதிப்பீட்டு தொகையை விட 4.90% கூடுதல் |
| | | | 2) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 4.95% அதிகம் |

அ.கு : 1) வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தொழிநுட்ப தகுதி அடிப்படையில் தகுதி பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளின் விலைவிகிதத்தினை ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட திரு.எச்.ஷபீர் அஹமத் அவர்கள் 4.90% சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ளார்.

2) மேற்கண்ட பணியானது முதல் அழைப்பாக உள்ளதாலும், மதிப்பீட்டை விட கூடுதலாக விலைவிகிதம் கொடுத்துள்ளதால் மதீப்பீட்டு விலைக்குள் விலை குறைப்பு கோரியதில் வரபெற்ற கடிதத்தில் விலை குறைப்பு கோர இயலாது என ஒப்பந்ததாரர் தெரிவித்ததை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

3) மேலும் மேற்காணும் திட்டப்பணி என்பதால் குறித்த காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசியம் கருதி வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

4) அரசு ஒதுக்கீடு செய்த தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1493/2016/இ1.

4. இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் ந.க.எண்.848/2018/A2, நாள்:18.12.2018 –ல் 2018-19-ஆம் ஆண்டு சந்தா தொகை ரூ.90,000/-ஐ செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையை "**இயக்குநர், நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர்**" பயிற்சி நிறுவனத்திற்கு வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு : | 1. | மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்.2903/2012/சி1.

5. வாணியம்பாடி நகராட்சியில் 2018-19-ஆம் ஆண்டின் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் (பொங்கல்-2019) விவரம் தமிழ் நாளிதழிலில் கீழ்காணும் நிறுவனத்தின் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட விவரம்.

| வ. எண் | செய்தித்தாள் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் மற்றும் தேதி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | MALAI MURASU, VELLORE (மாலைமுரசு நாளிதழ் 2019) | AD180713 16.01.2019 | 13,650/- |

மேற்படி நிறுவனத்திற்கு தொகை ரூ.13,650/-ல் வருமான வரி 2% தொகை ரூ.273/- போக மீதம் உள்ள தொகை ரூ.13,377/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண்.181/2019/இ1.

6. இந்நகராட்சியின் 2018-19-ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு (**REVISED BUDGET ESTIMATE**) மற்றும் 2019-2020-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு (**BUDGET ESTIMATE)** தயார் செய்து மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.302/2018/பி1

7. இந்நகராட்சி பொது சுகாதாரம் ஐ.ஈ.சி. நிதியின் கீழ் நகராட்சி அனைத்து வாகனத்தில் டெங்கு கொசு புழு ஒழிப்பு, பன்றி காய்ச்சல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் விவரத்தினை ஒலிபெருக்கி வாயிலாக விளம்பரம் மேற்கொள்ள ஒலிபெருக்கி பொருத்தும் பணிக்கு 23.01.2019-ந் தேதியில் வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலாசம் | ஓயர் லெஸ் ஒலிபெருக்கி மைக் ஒன்றின் விலை ரூ | ஒலிபெருக்கி ஆம்பிள்பார் ஒன்றின் விலை ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | நேதாஜி எலக்ட்ரானிக் | 5350.00 | 5150.00 | 10500.00 |
| 2 | கே.ஆர்.கே எலக்ட்ரிகல்ஸ் | 5450.00 | 5100.00 | 10550.00 |
| 3 | கிரீன் சோசியால்ட்டி | 5100.00 | 4960.00 | 10060.00 |

மேற்காணும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் கிரீன் சோசியால்ட்டி, ஜேலார்பேட்டை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ. கு : 1) அனுமதிக்கலாம்.
2) வரபெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 3ல் உள்ள கிரீன் சோசியால்ட்டி, ஜேலார்பேட்டை என்பவரின் விலைபுள்ளி குறைவாக ஏற்று பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண் :2508/2018/எச்1

8. வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதியில் உள்ள குப்பைகள் அன்றாட அப்புறப்படுத்தும் பணி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மையில் குப்பைகளை மக்க செய்யும் பணிக்கு உரக்கிடங்கில் சேகரித்து வருவதை சராசரி கணக்கிட்டு செய்ய குப்பைகளை எடை மேடையில் (வே பிரிஜ்) எடை பார்க்கப்பட்டதற்கு அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.10000/- இந்நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க எண் :208/2019/எச்1

9. வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதியில் உள்ள குப்பைகள் அன்றாட அப்புறப்படுத்தும் பணி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் சேகரித்து வருகிறது. தற்போது கோடைகாலம் ஆரம்பமாகிவிட்டதால் தீ பிடித்து விட்டது. தீயணைப்பு உதவியுடன் தீ அணைக்கப்பட்டது தீயனைப்பு ஊர்திகான தண்ணீர் தனியாரிடமிந்து டிரேக்டர் வாகனத்தில் தண்ணீர் சப்ளை செய்ததற்கான தோராய செலவினத்தொகை ரூ.10000/- இந்நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க எண் :333/2019/எச்1

10. வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதியில் உள்ள குப்பைகள் அன்றாட அப்புறப்படுத்தும் பணி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் சேகரித்து வருகிறது. தற்போது கோடைகாலம் ஆரம்பமாகிவிட்டதால் அவ்வப்போது தீ பிடிக்க வாய்ப்பு உள்ளதால் தீ அனைக்க தேவையான 3/4 அளவு கொண்ட ஓஸ் பைப் 500 மீட்டர் வாங்கி தயார் நிலையில் வைத்துக்கொள்ள அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.10000/- இந்நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க எண் :334/2019/எச்1

11. வாணியம்பாடி நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியில் கோயில் மசூதி மற்றும் பொது இடங்களில் தெளிக்கவும் கிருமிநாசினி சுண்ணாம்பு நீர் அரசு சார்ந்த நிறுவனங்களில் வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.2.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்

12. வாணியம்பாடி நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியில் ஈக்களை கட்டுப்படுத்த வேண்டி நோவான் கிருமிநாசினி வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.1.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்

ந.க.எண்.1719/19/எச்1,

13. வாணியம்பாடி நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியில் ஈக்களை கட்டுபடுத்தும் பணிக்கு லெமன் கிராஸ் தேவைப்படுவதால் வாங்கி கொள்ள அனுமதியும் அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.5.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :

1. அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1719/19/எச்1

14. பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள விளம்பரம் செய்யப்பட்டதில் 18.02.2019-ந் தேதியன்று பெறபட்ட விலைப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி கணினி பிரிவு மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக பயன்பாட்டிற்கு HP Laser Jet M1005 MFP மற்றும் 12A Toner பொருந்தும்படி) Printer with scanner வாங்குதல் பணிக்கு | 1) GETS COMPUTER ACCESSORIES, VELLORE. | 22,538/- குறைவு |
| | | 2) BRINDHA AGENCIES, VELLORE. | 22,715/- அதிகம் |
| | | 3) NETWARE COMPUTERS, VELLORE. | 22,833/- அதிகம் |

அ.கு :
1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் விலைப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் பணிக்கு 18.02.2019-ந் தேதியன்று விலைப்புள்ளி கோரிய குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள GETS COMPUTER ACCESSORIES, VELLORE. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.103/2019/இ1

15. வாணியம்பாடி நகராட்சியில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வு கூட்டம் அறிக்கை மற்றும் நேரடி அறிவுரை வழங்கியதன்படி நகரில் உள்ள பகுதிகளில் நுண்ணுயிரி உரமாக்கும் திட்டம் செயல்படுத்த (MCC) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30355/P3/2018, நாள்:10.01.2018-ஆம் தேதியன்று 6 இடங்களில் தலா ரூ.50.00 இலட்சத்தில் மொத்தம் ரூ.300.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பெற்று, அதன் அடிப்படையில் கீழ்காணும் இடங்களில் பணிகள் மேற்கொள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

1) புதிய பேருந்து நிலைய பின்புறம், புதூர் (வார்டு எண்.34, பிளாக் எண்.23)
2) இராமையன் தோப்பு (வார்டு எண்.15, பிளாக் எண்.18)
3) சென்னாம்பேட்டை (வார்டு எண்.5, பிளாக் எண்.7)
4) கோணாமேடு சுடுகாடு பின்புறம் (வார்டு எண்.27)
5) ஆலங்காயம் கிராஸ் ரோடு, வேப்பமர சாலை.
6) வளையாம்பட்டு சாலை சர்வே எண்.75

மேற்படி தேர்வு செய்யப்பட்ட இடங்களுக்கு நகராட்சி நிர்வாக செயற்பொறியாளர் (மண்டலம்) வேலூர் அவர்களின் செயல்முறை கடிதம், தொழில்நுட்ப அனுமதி கடித ந.க.எண்.310/2018/அ3, நாள்:18.01.2018-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதியின் அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.274, நாள்:20.02.2018-ன்படி புதிய பேருந்து நிலைய பின்புறம், புதூர் (வார்டு எண்.34, பிளாக் எண்.23) உள்ள இடத்திற்கு 08.02.2018-ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர் திரு.எஸ்.தாமோதரன் அவர்களுக்கு மேற்படி இடத்தில் பணிகள் செய்ய கடித ந.க.எண்.1493/2016/இ1, நாள்:27.02.2018-ஆம் தேதியன்று நகராட்சி ஆணையரின் செயல்முறை உத்திரவு அடிப்படையில் மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.தாமோதரன் அவர்கள் புதிய பேருந்து நிலைய பின்புறம், புதூர் (வார்டு எண்.34, பிளாக் எண்.23) உள்ள இடத்தில் பணிகள் மேற்கொள்ள சென்றபோது அப்பகுதியை சேர்ந்த பொது மக்கள் இப்பகுதியில் (MCC) கட்டிடம் கட்ட எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் புகார் மனுவும் அளித்தனர். எனவே மேற்படி பணியை விரைந்து முடிக்க வேண்டிய சூழ்நிலையினால் நூருல்லாபேட்டை பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.F, பிளாக்.11, T.S.எண்.5-ல் உள்ள பகுதியில் MCC கட்டிடம் கட்ட மன்றப் பொருள் வரைவு ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது மக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்து பணியை செய்யக்கூடாது என தடுத்து நிறுத்தி செய்த பணிகளை சேதப்படுத்தியும், பணியை நிறுத்தியதால் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட மாற்று இடத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதத்தின் அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.தாமோதரன் அவர்கள் சம்மத கடிதம் வழங்கியதை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) பணியின் அவசியம் கருதி குறித்த காலத்திற்குள் திட்டம் செயல்பட வேண்டியுள்ளதால், தூய்மை இந்தியா திட்டப்பணிகளாக உள்ளதாலும் உடனே பணிகள் மேற்கொள்ளவும், அதற்குண்டான பிரேரணை அனுமதி பெறவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1493/2018/இ1.

16. வாணியம்பாடி குடிநீர் நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 22.02.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சயில் கொடையாஞ்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வாரச் சந்தை பகுதியில் அமைக்கப் பட்டுள்ள குளோரினேஷன் யூனிட்டுகளுக்கு பிளிச்சிங் கரைசல் (Sodium Hypochlorite solution) திரவ முறையில் சப்ளை செய்தல் | 7.00 | 1) பநீ ராஜகணபதி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 0.34% குறைவு |
| | | | 2) பநீ சபரி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 0.69% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 22.02.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.206/2019/இ2

17. வாணியம்பாடி பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 19.02.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.30 நேதாஜி நகர் தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 8.50 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 19.02.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.167/2019/இ1.

இந்நகராட்சியில் திரு.டி.சி.சசிகலா அசோகன் நகராட்சி ஒப்பந்தாரர் திட்ட பணிகள் வேலை செய்து வரும் நிலையில் வைப்புத்தொகை வழங்க கோரியதின் அடிப்படையில் அன்னார் கோரிய தொகை முழுவதும் கால கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் 2012-2013-ம் ஆண்டு முதல் 2013-14-ம் ஆண்டு வரை பில் தொகையில் பிடித்தம் செய்தவை ரூ.48,800/-ம் மற்றும் 2012-13-ம் ஆண்டு முதல் 2015-2016-ம் ஆண்டு வரை பட்டியியல் பிடித்தம் செய்த தொகை ரூ.1,09,044/- ஆக மொத்தம் ரூ.1,57,844/-யை காலம் கடந்த வைப்பு பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2273/2018/அ3

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் நகராட்சியில் சில தகவல்களை தினசரி நாளிதழில் வெளியிடவும், மேலும் பல தகவல்களை நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் தெரிந்துக்கொள்ள தினசரி நாளிதழ் 2019-2020-ம் வருடம் முழுவதும் வாங்க தோராய செலவினம் ரூ.25000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2789/2015/பி3

இந்நகராட்சிக்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள், படிவங்கள் பதிவேடுகள் மற்றும் புதிய கணக்கு முறை படிவங்கள் வேலூர் NAPCO அச்சகத்தின் மூலம் வாங்கிகொள்ளவும், அதற்கான தோராய செலவு ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள் வேலூர் NAPCO அச்சகத்தில் வாங்கிகொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2368/2019/பி3